மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மேட்டூர்
முன்னிலை:திரு.ஆர்.மணிவர்மன், பி.ஏ., பி.எல்., எல்.எல்.எம்.,
மாவட்ட உரிமையியல் நீதிபதி, மேட்டூர்
2024 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 05 ஆம் நாள் திங்கள்கிழமை
இ.ம.எண்.05/2023
அ.வ.எண்.60/2017

1. ராஜாத்திமணி
2. K.R.மணி
(சார்பாக 1ம்வாதியின் பவர் ஏஜெண்ட்) ... மனுதாரர்கள்/வாதிகள்

/எதிராக/

1. செங்கோடன்
2. பெரியசாமி
3. மாது
4. ராமசாமி (இறந்தவர்)
5. தமிழ்நாடு அரசு சார்பாக,
மாவட்ட ஆட்சியர், சேலம்
6. சார் ஆட்சியர், மேட்டூர் அணை–1
7. வட்டாட்சியர், மேட்டூர் அணை–1
8. ராமாயி ...எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

இம்மனு கடந்த 03.07.2024 ஆம் தேதியன்று இந்நீதிமன்றம் முன்பாக இறுதியான விசாரணைக்கு வரப்பட்டு மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு.L.கணபதிசுப்ரமணியன் அவர்கள் ஆஜராகியும், 4ம் எதிர்மனுதாரர் இறந்தவராகவும், 1 முதல் 3 மற்றும் 8ம் எதிர்மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு.A.M.C.பெரியசாமி அவர்கள் ஆஜராகியும், 5 முதல் 7 வரையிலான எதிர்மனுதாரர்கள் தரப்பில் அரசு வழக்கறிஞர் திரு.S.ஹரிநாராயணன் அவர்கள் ஆஜராகியும், 5 முதல் 7 வரையிலான எதிர்மனுதாரர்கள் தரப்பில் எதிருரை தாக்கல் செய்யாததால் தோன்றா தரப்பினர்கள் ஆக்கப்பட்டும், இருதரப்பு வாதுரை கேட்கப்பட்டும், 1 முதல் 3 மற்றும் 8ம் எதிர்மனுதாரர்கள் தரப்பு எழுத்துமூலமான வாதுரை, வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்தும் இதுநாள் வரை எமது ஆய்வில் இருந்து வந்து மேற்படி இம்மனுவில் இந்நீதிமன்றம் வழங்கிடும்.

<u>உத்தரவு</u>

இம்மனு உரிமையியல் நடைமுறைச்சட்டம் பிரிவு 151ன் கீழ் வா.சா.2 குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்கு ஆஜராக முடியாத மருத்துவ காரணங்களால் அவரின் சாட்சியத்தை முடிக்க உத்தரவிட கோரி மனுதாரர்கள் இம்மனுவை தாக்கல் செய்துள்ளார்கள்.

1) <u>மனுப்பிரமாணப் பத்திரிக்கையின் சுருக்கம்</u> : –

எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகளுக்கு எதிராக விளம்புகை, விளைவுறு நிரந்தர உறுத்துக் கட்டளை பரிகாரங்கள் கோரி மனுதாரர்ள்/வாதிகளால் வழக்கு தாக்கல் செய்யப்பட்டு, விசாரணை நிலுவையில் உள்ள நிலையில், 2ம் மனுதாரருக்கு பவர் கொடுத்ததை நிரூபிக்க 2ம் மனுதாரரின் மனைவியான 1ம் மனுதாரரை விசாரித்து இருக்கிறார். தாவாவில் மனுதாரர்கள் தரப்பில் 1ம் மனுதாரர் வா.சா.2 ஆக விசாரிக்கப்பட்டு, குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக வாய்தா போடப்பட்டுள்ளது. 1ம் மனுதாரர் உயர் ரத்த அழுத்தம் காரணமாக கடந்த 10 வருடங்களாக மருத்துவ சிகிச்சை பெற்று வருகிறார். இந்நிலையில் கடந்த 03.11.2023ம் தேதியில் குறுக்கு விசாரணைக்கு ஆஜராகி சென்ற பின் உடல்நிலை பாதிக்கப்பட்டு சிகிச்சையில் இருந்து வருவதால் அவரால் தொடர்ந்து சாட்சியமளிக்க முடியாத சூழ்நிலை உள்ளது. எனவே வா.சா.2ன் சாட்சியத்தை முடிக்க உத்தரவிட கோரி மனுதாரர்கள் இம்மனுவை தாக்கல் செய்துள்ளார்கள்.

<u>2) 3ம் எதிர்மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டு, 1, 3 மற்றும் 8ம் எதிர்மனுதாரர்களால் ஏற்றுக் கொள்ளப்பட்ட எதிருரையின் சுருக்கம்:</u>

மனு பொய்யானது. மோசடியானது. சட்ட வலிவற்றது. மனுதாரர் கடந்த 12.07.2023 தேதியில் நீதிமன்றத்தில் ஆஜராகி சாட்சியம் அளித்துவிட்டு தற்போது எவ்வகையான ஆவண ஆதரவும் தனது மனுவுடன் இணைத்து தாக்கல் செய்யாமல் பொய் காரணங்களை முன்னிறுத்தி இம்மனுவை தாக்கல் செய்துள்ளார். ஒரு சாட்சி முதல் விசாரணை சாட்சியம் அளித்து, அது பதிவு செய்யப்பட்டுவிட்டால் பின்னிட்டு மேற்படி சாட்சியின் இறப்பு மற்றும் மேற்படி சாட்சி எங்குள்ளார் என்பது குறித்து

தெரியவில்லை என்ற காரணங்களை தவிர அதை ரத்து செய்ய இயலாது. எனவே இம்மனுவை செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டுமென 1 முதல் 3, 8 எதிர்மனுதாரர்கள் கூறியுள்ளனர்.

3) இருதரப்பு கற்றறிந்த வழக்குரைஞர்களின் மதிப்பிற்குரிய வாதங்கள் கேட்கப்பட்டன. ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டன. மனுதாரர்கள் மற்றும் எதிர்மனுதாரர்கள் தரப்பில் வாய்மொழிச் சாட்சியங்களோ, சான்றாவணங்களோ முன்னிலைப்படுத்தவில்லை.

4) பிரச்சினை :–

இம்மனு அனுமதிக்கத்தக்கதா என்பதே ஆகும்.

5) பிரச்சினைக்கான தீர்வு

(i) மனுதாரர்கள் தரப்பில் தாவாவில் 1ம் மனுதாரர் வா.சா.2 ஆக விசாரிக்கப்பட்டு, குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக வாய்தா போடப்பட்டுள்ளது என்றும், 1ம் மனுதாரர் உயர் ரத்த அழுத்தம் காரணமாக கடந்த 10 வருடங்களாக மருத்துவ சிகிச்சை பெற்று வருகிறார் என்றும், இந்நிலையில் கடந்த 03.11.2023ம் தேதியில் குறுக்கு விசாரணைக்கு ஆஜராகி சென்ற பின் உடல்நிலை பாதிக்கப்பட்டு சிகிச்சையில் இருந்து வருவதால் அவரால் தொடர்ந்து சாட்சியமளிக்க முடியாத சூழ்நிலை உள்ளது என்றும், எனவே வா.சா.2 ன் சாட்சியத்தை முடிக்க உத்தரவிட கோரி மனுதாரர்கள் மனு தாக்கல் செய்துள்ளது தெரிய வருகிறது.

(ii) 1 முதல் 3, 8 எதிர்மனுதாரர்கள் தரப்பில் மனுதாரர் கடந்த 12.07.2023 தேதியில் நீதிமன்றத்தில் ஆஜராகி சாட்சியம் அளித்துவிட்டு தற்போது எவ்வகையான ஆவண ஆதரவும் தனது மனுவுடன் இணைத்து தாக்கல் செய்யாமல் பொய் காரணங்களை முன்னிறுத்தி இம்மனுவை தாக்கல் செய்துள்ளார் என்றும், ஒரு சாட்சி முதல் விசாரணை சாட்சியம் அளித்து, அது பதிவு செய்யப்பட்டுவிட்டால் பின்னிட்டு மேற்படி சாட்சியின் இறப்பு மற்றும் மேற்படி சாட்சி எங்குள்ளார் என்பது குறித்து தெரியவில்லை என்ற காரணங்களை தவிர அதை ரத்து செய்ய இயலாது என்றும், எனவே மனுவினை செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டுமென கூறியுள்ளது தெரியவருகிறது.

(iii) வழக்குரையை பரிசீலனை செய்ததில் வாதிகள்/மனுதாரர்களால் விளம்புகை, விளைவுறு நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரங்கள் கோரி பிரதிவாதிகள்/ எதிர்மனுதாரர்களுக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது தெரியவருகிறது. வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்கையில், வழக்கு விசாரணை துவங்கப்பட்டு, வாதிகள் தரப்பில் 2ம் வாதி வா.சா.1 ஆக விசாரிக்கப்பட்டும், 1ம் வாதி வா.சா.2 ஆக விசாரிக்கப்பட்டு, குறுக்கு விசாரணை பகுதி நிறைவுற்றுள்ள நிலையிலும், வாதிகள் தரப்பில் 2ம் வாதிக்கு உடல்நிலை சரியில்லாத காரணத்தினால் அவரால் நீதிமன்றத்திற்கு வந்து சாட்சியமளிக்க இயலாது எனவும், அதனால் 2ம் வாதியின் சாட்சியத்தை கோப்பிலிருந்து ரத்து செய்யவும் (Scrap) கோரி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது தெரியவருகிறது.

(iv) மனுதாரர்கள் தரப்பில் இம்மனுவுடன் இணைத்து தாக்கல் செய்யப்பட்டுள்ள மருத்துவ சான்றிதழை பரிசீலனை செய்கையில், வா.சா.2 ற்கு (Benign paroxysmal positional vertigo) அதாவது தலையின் நிலையில் ஏற்படும் வேகமான மாற்றங்களால் தீங்கற்ற எதிர்பாரா நிலை கிறுகிறுப்பு மற்றும் (Uncontrolled systemic hypertension) அதாவது கட்டுப்பாடற்ற உயர் ரத்த அழுத்தம் உள்ளதாகவும், மேற்படி உடல் உபாதைகளுக்காக வா.சா.2 சுமார் 10 ஆண்டுகளாக சிகிச்சை பெற்று வருவதாகவும், தற்போது அவரது நிலை மோசமடைந்துள்ளதாகவும், அதனால் வா.சா.2 பயணம், கடுமையான பணிகள் ஆகியவற்றை தவிர்த்து ஓய்வெடுக்க வேண்டுமெனவும் மருத்துவரால் அறிவுறுத்தப்பட்டுள்ளது தெரியவருகிறது. மேற்படி மருத்துவ சான்றிதழை பரிசீலனை செய்கையில், வா.சா.2 சுய நினைவுடனும், பேசும் நிலையிலும் உள்ளார் என்பது தெளிவாகிறது.

(v) மேற்கண்ட சங்கதிகளையும், இவ்வழக்கின் சூழ்நிலைகளையும் கவனத்தில் கொள்கையில், 1ம் வாதியான வா.சா.2 ஆல் கடந்த 12.07.2023ம் தேதியில் முதல் விசாரணை பிரமாண வாக்குமூலம் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டு, கடந்த 03.11.2023ம் தேதியில் 1 முதல் 4 வரையிலான பிரதிவாதிகள் தரப்பில் பெரும்பான்மையான சங்கதிகள் குறித்து வா.சா.2 யிடம் குறுக்கு விசாரணை செய்யப்பட்டு, குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக வழக்கு வேறு தேதிக்கு ஒத்தி

வைக்கப்பட்டுள்ள நிலையில், வா.சா.2ன் முதல் விசாரணை சாட்சியத்தையும், அதனை அனுசரித்து 1 முதல் 4 வரையிலான பிரதிவாதிகளால் செய்யப்பட்டுள்ள பகுதி குறுக்கு விசாரணையையும் வழக்கு கோப்பிலிருந்து ரத்து செய்தால் 1 முதல் 4 வரையிலான பிரதிவாதிகள் தரப்பிற்கு பாதகமான சூழ்நிலை ஏற்படுவதற்கான சாத்தியக்கூறுகளின் மேம்பட்ட நிலை உள்ளதாக இந்நீதிமன்றம் கருதுகிறது.

(vi) மேலும் அவ்வாறு ஒருவேளை நீதிமன்றத்திற்கு பயணம் செய்து, சாட்சியமளிக்க வா.சா.2ன் உடல்நிலை ஒத்துழைக்காது எனும் பட்சத்தில், வா.சா.2ன் சாட்சியத்தை நிறைவு செய்ய மனுதாரர்கள் நீதிமன்ற ஆணையரை நியமிக்க கோரி மனு செய்வதற்கான அனைத்து வாய்ப்புகளும் உள்ளது என இந்நீதிமன்றம் கருதுகிறது. அவ்வாறு சுய நினைவுடனும், பேசும் நிலையிலும் உள்ள ஒரு சாட்சி உடல் நலக்குறைவால் நீதிமன்றத்திற்கு வர இயலாத நிலையில், நீதிமன்ற ஆணையரை நியமித்து மேற்படி வா.சா.2ன் குறுக்கு விசாரணை சாட்சியத்தை நிறைவு செய்வதற்கு சட்டத்தில் வழிவகை உள்ள நிலையில், பெரும்பான்மையான வழக்கு சங்கதிகள் குறித்து பகுதியாக குறுக்கு விசாரணை செய்யப்பட்ட வா.சா.2ன் சாட்சியத்தை ரத்து செய்ய கோரி மனுதாரர்கள் தரப்பில் தாக்கல் செய்துள்ள இம்மனு தகுதிப்பாடற்றது என கருதி இந்நீதிமன்றம் தள்ளுபடி செய்து உத்தரவிடுகிறது.

முடிவாக, இம்மனு செலவுத்தொகையின்றி தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகிறது.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு 2024 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 05ஆம் நாள் இந்த திறந்த நீதிமன்றத்தில் என்னால் அவையறியப் பகரப்பட்டது.

R MANIVARMAN

Digitally signed by R MANIVARMAN
Date: 2024.08.05 18:29:37 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டூர்.

<u>மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள்  சான்றாவணங்கள்:– இல்லை</u>

<u>எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்:–  இல்லை</u>

R MANIVARMAN

Digitally signed by R MANIVARMAN
Date: 2024.08.05 18:29:42 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டூர்.